<u>முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>

<u>ஓ.எஸ்.எண்.137/2016</u>

**நாள் : 02.06.2023**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பி.வா.சா. 2சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | பி.வா.சா.2 திரு.தனஞ்செழியன் |
| வயது | : | |
| த/பெ | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| சாதி | : | |
| விலாசம் | | |

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

கீழ்முதலம்பேடு பக்கத்தில் உள்ள சீனிவாசா செங்கல் சூலை தெரியுமா என்றால் தெரியும். அது எனது தகப்பனாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு விபத்து ஏற்பட்டு அடிப்பட்டிருந்ததால் செங்கல் சூலையை நான் பார்த்துக்கொண்டு வருகிறேன் என்றால் சரியல்ல. அவருக்கு விபத்து ஏற்படவில்லை. முட்டி தேய்மானத்தால் அவரால் செங்கல் சூலையை பார்க்கமுடியவில்லை அதனால் அதை நிர்வகித்து வருகிறேன். நான் பி.ஈ. கம்பியூட்டர் சையின்ஸ் படித்திருக்கிறேன். 2012 ல் இருந்து 2016 ஆண்டு மத்தி வரை கட்டிடம் கட்டி விற்கும் தொழில் செய்து வந்தேன். நான் தாக்கல் செய்த பிரமாணவாக்குமூலத்தில் நான் பிப்ரவரி மாதம் 2012ல் ரூ.24 இலட்சம் வாதியிடமிருந்து வாங்கினேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆண்டுக்கு 24 சதவீத வட்டி என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில வழக்கு தாக்கல் செய்த தேதிவரையில் நான் ரூ.20 இலட்சம் கொடுத்துள்ளேன் என்றும் அது வட்டியுடன் சேர்த்து கொடுத்தேன் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ரூ24 இலட்சத்திற்க்கு நான் சொல்லும் வட்டிபடி 2 ஆண்டுக்கு ரூ.11,52,000/- வருகிறது என்றால் சரிதான் ஆனால் இன்னும் அதிகபடியான வட்டிக்கு வட்டி கொடுத்திருக்கிறேன். அவ்வாறு நான் சொல்லும் கணக்குபடி

பார்த்தால் 4 ஆண்டுக்கு வட்டியே ரூ.23 இலட்சம் ஆகிறது என்றால் சரிதான். வட்டி மட்டுமே ரூ.23 இலட்சம் என்று சொல்லும்போது 2016 ல் ரூ.20 இலட்சம் வட்டியுடன் சேர்த்து கொடுத்தேன் என்று சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. இந்த கடன் தொடர்பாக நான் ஏதாவது கடன் பத்திரம் எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. கடன் நான் தான் வாங்கினேன் என்றும் கடன் பாக்கியை நான் தான் தரவேண்டும் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். பணத்தை நான் தான் தரவேண்டும் என்றும் பணம் கொடுக்க நான் தயராக உள்ளேன் என்று சொல்லி வாதிக்கு அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. வாய் மொழியாக சொன்னேன். வாதிக்கு தற்போது பணம் தர தயாராக இருக்கிறேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் தான் எனக்காக கடன் வாங்கினார் என்றும் அதற்காக தான் அவர் கடன் பத்திரம் எழுதி கொடுத்தார் என்றும் தற்போது எனது தகப்பனாரை காப்பாற்ற வேண்டி நான் தான் கடன் வாங்கினேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் பொன்னேரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.201/2016 வாதிதரப்பில் ஆஜராகாததால் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். வாதிக்கு இந்த வழக்கை தவிர வேறு வழக்கு எதுவும் இல்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நானும் வாதியும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தூரத்து உறவினர் என்றால் இல்லை. கும்மிடிபூண்டி தற்போதைய சட்ட மன்ற உறுப்பினர் எனது சமூகத்தை சேர்ந்தவர் என்றும் எனது ஊர்காரர் மற்றும் எனது உறவினர் என்றால் சரிதான். நானும் எனது ஊரில் பெரிய மற்றும் ஜனகட்டு உள்ள குடும்பம் என்றால் சரிதான். எங்க ஊரில் வந்து எங்களை யாரும் மிரட்ட முடியாது என்றால் மிரட்டியுள்ளனர். பணத்தை கொடுக்க கூடாது என்பதற்காக வாதி என்னை மிரட்டியதாக பொய்யான குற்றச்சாட்டு மற்றும் புகார் சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. மிரட்டியது சம்மந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளிரிடம் புகார் கொடுத்துள்ளேன். அந்த புகாரிலும் அதிகபடியான வட்டிவாங்குவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த விசாரணையில்

பணத்தை கணக்கு பார்த்து கொடுத்துவிடுங்கள் என்று அறிவுரை சொன்னார்கள் என்றால் சரிதான். நான் பணம் தருகிறேன் என்று தான் சொன்னேன். சுமன், இலுபாக்கம் பழனி, அன்புநிதி ஆகியோருடன் என் தகப்பனார் கடன் பட்டிருநத்தார் என்றால் சரிதான். அதற்காக சில சொத்துக்களை விற்று கொடுத்தோம், பவர் பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். பூபதி, சண்முகம் மற்றும் வாதி விஜயன் ஆகியோர் மீது புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். இது இல்லாமல் நான் எவ்வளவு பேருக்கு கடன் பாக்கி என்றால் எதுவும் இல்லை. நானும் என் தகப்பனாரும் சேர்ந்து 40, 50 பேரிடம் கடன் பட்டு இருக்கோம் என்றும் கடன் செலுத்தபடாததால் அவர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் நான் கடன் வாங்க வில்லை. என் தகப்பனார் கடன் வாங்கினாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. யார் யார் எல்லாம் கடன் பாக்கி தரவேண்டும் என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்தார்களோ அவர்கள் போட்ட வழக்கை சாதகமாக வைத்துக்கொண்டு அந்த ஆவணங்கள் வாதி விஜயன் மற்றவர்களுக்கு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரிதான். என் தகப்பனார் தாவா கடனை கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் தாவா கடனை கொடுக்ககூடாது என்பதற்காக என் தகப்பனார் அந்த கடனை வாங்கவில்லை என்றும் நான் தான் வாங்கினேன் என்று அவருக்கு பவ்வியப்பட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**முதன்மை சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**